DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.40/2019**

| | | | |
|---|---|---|---|
| Name | : | ராஜா | **Pw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of November 2022.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. குற்றாலம் காவல் நிலையத்தில் கடந்த 08.09.2013 ம் தேதியன்று நடந்த விபத்து பற்றி குற்ற எண்.355/2013 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.1 ஆகும். பிரேதப் பரிசோதனை அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.2 ஆகும். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.3 ஆகும். இன்சூரன்ஸ் பாலிசியின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.4 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனம் டிஎன் 76 எல் 1229 3 ம் எதிர்மனுதாரரிடத்தில் விபத்து சமயத்தில் காப்பீடு எதுவும் செய்யவில்லை என்றால்

சரியல்ல. ம.சா.ஆ.3 ஆவணத்தில் எந்த காப்பீடு கழகம் என்று குறிப்பிடப்படவில்லை. ம.சா.ஆ.4 ஆவணத்தில் பாலிசி காலம் 17.10.2011 முதல் 16.10.2012 வரை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். ஆனால் விபத்து நடந்த தேதி ம.சா.ஆ.1ன் படி 08.09.2013 ஆகும். அதனால் விபத்து சமயத்தில் 3ம் எதிர்மனுதாரரிடம் 2ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 3ம் எதிர்மனுதாரரிடத்தில் எவ்வித காப்பீடும் இல்லாததால் 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இறந்தவரின் வயது, வருமானம், தொழில் போன்றவற்றைக் காண்பிக்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வரைபடம், பார்வை மகஜர், குற்றப்பத்திரிக்கை போன்றவை எங்களுக்கு எதிராக இருப்பதால் தான் அவற்றைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி நான் தனியாக வசித்து வருகிறேன். மற்ற மனுதாரர்களும் திருமணம் ஆகி தனியே வசித்துவருகிறார்கள். இறந்தவரைச் சார்ந்து நாங்கள் இருக்கவில்லை என்பதால் எங்களுக்கு எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யததால் இறந்தவரின் வாரிசுகள் நாங்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. பல்வேறு தலைப்புகளில் நாங்கள் கோரியிருக்கும் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.